பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 23 திங்கட்கிழமை 07.06.2021 கதிர் 214

இது ரகசியம் அல்ல!

முதலில் செய்தியை வெளிப் படுத்தி உடைப்பதுதான் செய்தி யாளர் பணியில் சிக்கலான விட யம். சில சமயங்களில் அப்படிச் செய்தியை அம்பலப்படுத்துவ தற்கு துணிச்சலும் தேவைப்படும். பல சமயங்களில் குருட்டு அதிர்ஷ் டமும் உதவி செய்து பக்கம்02

## முழுநேரப் பயணத் தடை ஜூன் 14இல் நீக்கப்படாது

### சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் ஆருடம்



நாட்டில் கொரோனாப் பாதிப்புக்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், ஜூன் 14ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பயணத்தடையை நீக்கு வது நடைமுறைச் சாத்தியமில்லை என்று பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப் 2

## ஜூன் 21 வரைக்கும் பயணத்தடை நீடிப்பு?

நாட்டில் தற்போது அமுலில் உள்ள முழுநேரப் பயணக் கட்டுப்பாடு எதிர் வரும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தி, மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கி லேயே பயணத் தடையை நீடிப்பது குறித்து தற்போது கவனம் செலுத்தப்பட் டுள்ளது.

அரச உயர்மட்ட வட்டாரங்களை மேற் கோள்காட்டி இந்த விடயம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

பயணத் தடை அமுலில் உள்ள காலப்பகுதியிலும் வைரஸ் தொற்று வீதம் குறையவில்லை. எனவே, பயணத் தடை எதிர்வரும் 21ஆம் 05

# நல்லூர் அரசடியில் நேற்று 55 பேருக்குக் கொரோனா

## யாழ் மாவட்டத்தில்: 98 வட மாகாணத்தில்: 140

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட ஜே/103 கிராம சேவகர் பிரிவில் உள்ள நல்லூர் அரசடிப் பகுதியில் மட்டும் நேற்று ஒரே நாளில் 55 பேருக்கு கொரோனாத் தொற்று புதிதாக இனங் காணப்பட்டுள்ளது.

இதேநேரம் யாழ்.மாவட்டத்தில் 98 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 140 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 05

## 2,976 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ்

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 976 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையா ளம் காணப்பட்டுள்ளனர் என்று அரசதகவல் திணைக்களம் அறி வித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோ னாத் தொற்றுடன் 05

## யாழில் இருவரை பலியெடுத்த கொரோனா

### மொத்தச் சாவு 50ஆக உயர்வு


(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த இரண்டு நாள்களில் இரண்டு பேர் உயி ரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்மூலம் 05

## உயிரிழந்த நிலையில் கடல் உயிரினங்கள்

### பல இடங்களில் கரை ஒதுங்கல்



இலங்கையின் கடற்பரப்பில், 'எக்ஸ் - பிரஸ் பேர்ல் கப்பல் தீப் பற்றி எரிந்தமையால் இலங்கை யின் கடற் சார் சூழலின் பெரும் பகுதி மாசடைந்துள்ளது. 'எக்ஸ் - பிரஸ் பேர்ல்' கப்பல் தீப்பற்றி யது முதல் கடல்வாழ் 05

## யாழ்ப்பாணத்தில் பொலிஸார் விசேட ரோந்து தேவையற்று நடமாடியவர்களுக்கு எச்சரிக்கை

(இ.கலையமுதன்)


யாழ்ப்பாணம் புறநகர் பகுதிகளில் பொலிஸார் நேற்று விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாடு பூராகவும் கொரோனா வைரஸ் தொற் றைக் கட்டுப்படுத்தும் வகையில் பயணத் தடை அமுலில் உள்ளது. இந்தநிலையில் யாழ்ப்பாணத் தில் பயணத் தடையை மீறி வீதியில் பயணிப்பவர்க ளைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் 05




## சீரற்ற காலநிலையால் சாவு எண்ணிக்கை 16 ஆக உயர்வு

### நூற்றுக்கணக்கான வீடுகளுக்குச் சேதம்



அடைமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற் றும் மண்சரிவால் நாட்டில் உயிரிழந்தவர்க ளின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள் ளது. ஐவர் காயமடைந்துள்ளனர். மூவர் காணாமல்போயுள்ளார்.

- இவ்வாறு அனர்த்த முகாமைத்துவ மத் திய நிலையம் நேற்று மாலை விடுத்துள்ள நாளாந்த நிலைவர அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. 2

## பயணக் கட்டுப்பாடு நீங்குமா? மக்களின் கைகளிலே முடிவு

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

நாடெங்கும் முழுநேரப் பய ணத் தடை அமுலில் உள்ளது. இதை உணர்ந்து மக்கள் செயற் படவேண்டும். எதிர்வரும் 14ஆம் திகதி பயணத் தடையை நீக்கு வதா? இல்லையா? என்பது மக் களின் கைகளில்தான் உள்ளது.

- இவ்வாறு பொலிஸ் 05

## யாழில் இனி தடுப்பூசி 10ஆம் திகதி

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக் கான இரண்டாம் கட்டத் தடுப்பூசி கள் எதிர்வரும் 10ஆம் திகதியில் இருந்து கிடைக்கும் என எதிர் பார்க்கின்றோம்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கணபதிப் பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட 05

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடும்.

சத்தம் சந்தடியின்றி நாட்டுக்குள் வந்திறங்கிய சில அமெரிக்கர்கள் குறித்து நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

*“அதைத் தகவலாக எழுதுவதே சிக்கலான விடயம். எனினும் சற்றுத் துணிவு, தெம்புடன் எனக்குக் கிடைத்த தகவல்களை வாசகர்களுடன் பரிமாறுகிறேன்.”* – என்ற பீடிகையுன் விடயத்தை முந்திக் கொண்டு போட்டுடைத்தேன்.

இப்போது விவகாரம் சூறாவளியாகி விட்டது. ஊடகங்கள் பலவும் இது குறித்து இன்னும் வாய் திறக்கவில்லை. ஆனால் விடயம் இலங்கை – அமெரிக்க இராஜதந்திர உறவில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் சாத்தியங்களும் உள்ளன.

*“கொழும்புச் செய்தியாளர்கள் இங்குள்ள புலனாய்வாளர்களைப் போல மோப்பம் பிடித்துத் தேடுகின்றார்கள். விடயம் வெளிவரும் போது வாசகர்களுக்கு (மேலதிக விடயங்களைத்) தருவேன்.”* – என்று நேற்று இவ்விடயத்தை ஒட்டிக் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது மேலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவற்றுக்குள் இறங்க முன்னர் ஓர் அமெரிக்க இராஜதந்திரியைப் பற்றிக் குறிப்பிட்ட வேண்டியுள்ளது.

அவர் சமந்தா பவர் அம்மையார். இரும்புச் சீமாட்டி. அமெரிக்கக் கல்விமான். இராஜதந்திரி. 2013 முதல் 2017 வரை ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவராகக் கடமையாற்றியவர். முன்னைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப்பீடத்துக்கு எதிராக ஐ.நாவில் பல திரைமறைவு ‘ஒப்பரேஷன் களை’ முன்னெடுத்தவர் சமந்தா பவர். முன்னைய ராஜபக்ஷ அரசுக்கு இராஜதந்திர ரீதியில் ரொம்பத் தலையிடி கொடுத் தவர். சமந்தா பவர் மீது ராஜபக்ஷக்களுக்குக் கடும் சீற்றம் உள்ளது.

உலகில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தீவிரமாகக் குரல் எழுப்பும் இராஜதந்திரியான இவரை, உலகின் அதிகாரம் மிக்க முதல் நாற்பது பெண்மணிகளுக்குள் ஒருவராக சர்வதேச அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

அவரையே இப்போது சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் USAID தலைவராக ஜோ பைடனின் நிர்வாகம் கடந்த ஜனவரியில் நியமித்தது. அந்த யு.எஸ்.எயிட் நிறுவனத்தை ஒட்டியே சர்ச்சை கிளம்பியிருக்கின்றது. இனி விடயத்துக்கு வருவோம்.

அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பலர் USAID என்ற இந்த அமெரிக்க தொண்டு நிறுவனத்தின் பெயரில் கபடத்தனமாக நாட்டுக்குள் இரகசியமாக நுழைந்திருக்கின்றமை குறித்து இப்போது இ லங்கை அரசு உயர்மட்ட விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ராஜா குணரட்ண, பாதுகாப்பு அமைச்சுக்குச் செய்த முறைப்பாட்டை அடுத்தே விடயம் அம்பலமானதாகக் கூறப்படுகின்றது.

மியன்மாரில் பணியாற்றிய – அங்கு இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டமையில் சம்பந்தப்பட்டவர் எனக் குற்றம் சுமத்தப்படும் – முன்னாள் அமெரிக்க இராணுவ அதிகாரியும் இப்படி இலங்கைக்குள் நுழைந்திருக்கின்றார் என்று பாதுகாப்பு அமைச்சிற்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாம்.

இதையடுத்து இந்த விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சு தன் விசாரணைகளை விரைந்து மேற்கொண்டது. வெளிவிகாரஅமைச்சிடமும்விவரம்கோரப்பட்டது.

மேற்படி அமெரிக்க அணி சுற்றுலாப் பயணிகளுக்கான விசாவுடன் நாட்டுக்குள் வந்துள்ளது என்று உறுதி செய்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, அவர்களின் வருகை குறித்து தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் பாதுகாப்புச் சபையில் விரிவாகப் பேசப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் நிலைமை குறித்து விளக்கமளிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை தொடர்பான பிரேரணை ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமெரிக்காவின் அனுசரணையுடன் முன்மொழியப்பட்ட போது அது தொடர்பான விடயங்களில் பின்புலத்தில் நின்று தீவிரமாகச் செயற்பட்டவர் சமந்தா பவர்.

அவர் தலைமையின் கீழ் இயங்கும் USAID நிறுவனம் ஊடாகவே இப்போது அமெரிக்க இராணுவத்தினர் தொண்டர் அமைப்புப் பணி என்ற பெயரில் ஊடுருவியுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

இலங்கையில் மேற்படி அமெரிக்க அரசின் தொண்டர் அமைப்பான USAID பெரிய அளவில் உதவிப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. கணிசமான உதவிகளையும் வழங்கி வருகின்றது.

அதன் செயற்பாடுகள், கணக்கு வழக்குகளைப் பூதக் கண்ணாடி போட்டு ஆராய்ந்து, புலனாய்வு செய்து, துப்பறிவதற்கு கொழும்பு ஆட்சிப்பீடம் கங்கணம் கட்டித் தயாராவதாகத் தெரிகின்றது.

முன்னாள் அமெரிக்கப் பிரஜையான – இப்போதும் அமெரிக்காவில் தனது நலன்களைக் கொண்டுள்ள – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, இத்தகைய நுணுக்கமான புலனாய்வுகள் அரசியல், இராஜதந்திர மற்றும் தனிப்பட்ட நெருக்கடிகளைத் தருவனவாக அமையக் கூடும்.

எது, எப்படியோ, அமெரிக்காவுடன் நேரடி உரசுப்பாட்டுக்குக் கொழும்பு தயாராவதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

– மின்னல் –

## சீரற்ற காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன் 10 மாவட்டங்களில் 67 ஆயிரத்து 564 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 70 ஆயிரத்து 902 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர் எனவும், 935 வீடுகள் பகுதியளவும், 15 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்றும் மேற்படி மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, புத்தளம், களுத்துறை, நுவரெலியா, கேகாலை, காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் வாழ்பவர்களே சீரற்ற காலநிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- - - - - - - - - - - - - - - -

## முழுநேரப் பயணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டிருந்தாலும் பலர் வழக்கம் போலவே நடந்துகொள்கின்றனர்.

பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலம் 90 சதவீத மக்களின் பயணங்களைக் கட்டுப்படுத்த முடியுமென நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக எங்களால் எதிர்பார்த்த வீதத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

நகரங்களிலும் கொழும்பிலும் உள்ள ஒவ்வொரு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளாகச் செயற்படுகின்றன.

அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்கள் ஊழியர்களை அழைக்கிறார்கள். அன்றாடத் தொழில்களில் ஈடுபடும் நபர்கள் மட்டுமே வீட்டில் தங்குகின்றார்கள்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மக்கள் சாதாரண அன்றாட நடைமுறைகளின் கீழ் செயற்படுகிறார்கள்.

ஒரேயொரு வித்தியாசம் என்னவென்றால், எந்தவொரு பொதுப்போக்குவரத்து முறையும் செயற்படவில்லை. அதற்குப் பதிலாக, மக்கள் தங்கள் தனியார் வாகனங்களில் பயணம் செய்கின்றார்கள் – என்றார்.



# பசளை மற்றும் கிருமிநாசினிகளை கட்டுப்பாட்டு விலைக்கு வழங்குக

## ஜனாதிபதி, பிரதமருக்கு விநோ எம்.பி. கடிதம்



2021 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை மற்றும் உப உணவு செய்கைக்கான பசளை, கிருமி நாசினிகளின் தட்டுப்பாடுகளை நீக்கவும், விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விவசாய அமைச்சருக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அவசர கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

நெற்பயிர்ச் செய்கையையும், உப உணவு தோட்டப் பயிர்ச் செய்கையையும் தமது ஜீவனோபாய தொழிலாக மேற்கொண்டு வரும் வன்னி மாவட்டத்தின் பெரும்பான்மையான மக்கள் காலநிலை, இயற்கை இடர்களுக்கு ஒரு புறம் முகம் கொடுத்துக் கொண்டு வரும் நிலையில் கிருமிநாசினிகள், உரம் போன்ற விவசாய உள்ளீடுகள் குறித்த காலத்துக்குள் கிடைக்கப் பெறாமையால் பல்வேறு சிரமங்களுக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்றமையை அவதானிக்கின்றோம்.

2021 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையும், உப உணவு தோட்ட செய்கையும் இந்தக் கொடிய கொவிட் தொற்றுக் காலத்திலும் வன்னி மக்கள் தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யவும், வாழ்வாதாரத்துக்காகவும் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த கால யுத்தத்தால் மிக மோசமான பாதிப்புக்களைச் சந்தித்த மாவட்டம் வன்னி என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. இந்த மாவட்ட மக்கள் அனைத்து வசதிகளுடனும், வளங்களுடனும் வாழ்ந்தவர்கள்.

இன்று கையறு நிலையில் வாழும் இந்த மக்களுக்கு இந்த விவசாயம் மட்டுமே ஓரளவுக்கேனும் கை கொடுக்கின்ற நிலை காணப்படுகின்றது. ஆனாலும் உரிய நேரத்திலும், காலத்திலும் விவசாய உள்ளீட்டுப் பொருள்கள் கிடைக்காமையால் விவசாயிகளினால் தாங்கிக் கொள்ள முடியாத சுமைகள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

விவசாய உள்ளீடுகளின் தட்டுப்பாடுகள் ஒருபுறமிருக்க விலை அதிகரிப்பினாலும் அல்லற்படுகின்றனர். இன்று 1,500 ரூபா பெறுமதியான ஓர் அந்தர் உரம் 4 ஆயிரம் ரூபா தொடக்கம் 4 ஆயிரத்து 500 ரூபா வரை வெளிச்சந்தையில் விற்கப்படுகின்றது.

கிருமிநாசினிகள், மருந்துப் பொருள்களும் 35 தொடக்கம் 40 சதவீதம் வரையான விலை அதிகரிப்பு செய்யப்பட்டு கடந்த ஒரு மாதமாக வெளிச்சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.

சேதன, இரசாயன பசளைகளுக்கான இறக்குமதித் தடை நீக்கப்பட்ட பிற்பாடும் இதே நிலைமை தொடர்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றமை கவலை தருகின்றது.

பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகள் பலன் தரக்கூடிய அறுவடையை செய்ய முடியுமா? என அச்சம் கொண்டுள்ளனர். இந்த நிலையில் மொத்த, சில்லறை வியாபாரிகள், இடைத்தரகர்கள் அதிக இலாபமீட்டுகின்றமையையும், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றமையையும் ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

அரசின் மானிய அடிப்படையிலான உரங்கள் கூட தற்போதைய பயணத்தடை உட்பட்ட காரணங்களால் சீராக கிடைக்கப் பெறுவதில்லை. வன்னி மாவட்டத்தில் ஐம்பது சதவீத மானிய உரங்கள் கூட கமநல திணைக்களத்தால் இதுவரை வழங்கப்படவில்லை என விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே, இவை சம்பந்தமாக விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்குக் கட்டுப்பாட்டு விலையில் பசளை, கிருமிநாசினிகளை பெற்றுக்கொள்ளவும் சிரமங்கள் இன்றி உரிய காலத்தில் துரித கதியில் இவற்றைப் பெற்றுக் கொடுக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறும் காலதாமதங்களுக்கும், விலை உயர்வுக்கும் காரணங்களைக் கண்டறிந்து தீர்வு காணுமாறும் தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். - என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பயணத்தடை தளர்வு தொடர்பில் 14 ஆம் திகதிக்கு முன்னர் முடிவு

கொழும்பு, ஜூன் 07

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை தளர்த்தப்படுமா என்பது தொடர்பில் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னதாக அறிவிக்கப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த இருக்கும் இலகுவான வழிமுறை நாட்டை முடக்குவதென்றால் அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தியாக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

'நாடளாவிய ரீதியில் நாளாந்தம் 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். கொவிட் மரணங்களும் அதிகரித்துள்ளன என சுகாதாரத் தரப்பினர் தொடர்ச்சியாக எமக்கு வலியுறுத்துகின்றனர்.

இந்நிலையில், தற்போது நாட்டைத் திறப்பது ஆரோக்கியமான விடயமல்ல என்பது எமக்கும் தென்பட்டது. ஏற்கனவே இரண்டு வாரங்கள் பயணத் தடை பிறப்பிக்கப்பட்டாலும் கூட அதில் முறையாக மக்கள் செயற்படாத நிலையொன்று காணப்பட்டது.

அதன் பின்னரும் ஒரு சில பகுதிகளில் மக்களின் அநாவசியச் செயற்பாடுகளை அவதானிக்க முடிந்தது. எனவேதான் 7ஆம் திகதி வரையில் பிறப்பிக்கப்பட்டிருந்த பயணத்தடையை மேலும் ஒரு வார காலம் நீடிக்கத் தீர்மானித்தோம்.

இந்தத் தீர்மானம் ஜனாதிபதியின் தனித் தீர்மானமோ அல்லது நான் எடுத்த தனித் தீர்மானமோ அல்ல. நாட்டிலுள்ள விசேட வைத்திய நிபுணர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகளுக்கு அமைய, கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படுகின்றது.

ஏற்கனவே 14 நாள்கள் பயணத் தடை பிறப்பிக்கப்பட்டாலும் கூட 21 நாள்கள் தொடர்ச்சியாகக் கட்டுப்பாடுகளை விதித்தால் மட்டுமே முழுமையான பெறுபேறுகள் வெளிப்படும்.

21 நாள்களுக்குப் பின்னரும் பயணத் தடை நீடிக்குமா? தளருமா? என்பது தொடர்பில் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் அறிவிப்போம். கொவிட் பரவலைக் கட்டுப்படுத்த இருக்கும் சரியான வழிமுறை நாட்டை முடக்குவதென்றால் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதனால் மக்களுக்கு சிரமங்கள் ஏற்படும். ஆனால், அதனையும் தாண்டி மக்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே செயற்படுகின்றோம்' - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## செல்வாக்கு இழக்கும் கோட்டா

**இலங்கையின் வரலாற்றில் முன்னர் இருந்த எந்த ஜனாதிபதிக்கும் கிடைக்காத பெருவெற்றியை கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தென்னிலங்கை மக்கள் வழங்கினர்.**

**ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றி மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து வந்து நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தையும் தாராளமாக வழங்கினர் சிங்கள மக்கள்.**

**நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஏற்படுத்தி, அதன் கீழ் சுமார் பதினொரு ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சியைக் கொண்டு நடத்தியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.**

**அதற்குப் பின்னர், வசதியாக மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கொண்டு நடத்தும் முழு அளவிலான அதிகாரம் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கே கிடைத்துள்ளது.**

**இடையில் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன போன்றோர் தேவைப்படும் சமயங்களில் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றனராயினும், அந்தப் பலத்தை எப்போதும் தம் விருப்பப்படி பயன்படுத்தக் கூடிய நிலையில் அவர்கள் இருக்கவில்லை.**

**அவர்கள் எல்லோருக்கும் மாறாக, இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதிகாரம், பலம் வலுவாக உள்ளது. ஜனாதிபதி என்பதற்கு அப்பாலும் முப்படையினர் மீது செல்வாக்குச் செலுத்தும் – அதிகாரம் தண்டிய – வலிமை அவரிடம் உண்டு.**

**ஆனால், முன்னைய ஜனாதிபதிகள் எல்லோருக்கும் மாறாக, குறுகிய காலத்தில் தமது செல்வாக்கை இழக்கும் அதிபராகவும் அவரே இருக்கின்றார் என்பது அரசியல் அவதானிகளினால் இப்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.**

**ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் அவரது வெற்றிக்காக முழு மூச்சுடன் உழைத்த பலர் இப்போது அவர் அணியில் இல்லை. அவர் பக்கம் இல்லை என்பதை விட அவருக்கு எதிரான தரப்புடன் போய்ச் சேர்ந்துள்ளனர் என்பது தான் உண்மை.**

**குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் சமயத்திலும் பொதுத் தேர்தல் வேளையிலும் அவருக்கு பக்கபலமாக அணி திரண்ட முக்கிய மதத் தலைவர்கள் எல்லோரும் ஒவ்வொருவர் ஒவ்வொருவராக மெல்ல கோட்டாபாய அணியை விட்டுக் கழறத் தொடங்கி விட்டனர்.**

**அவர்களில் ஒருவர் நாரஹன்பிட்டிய அபேராமா விகாரையின் விகாராதிபதி வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரர். 2015 ஜனவரியில் ராஜபக்ஷக்கள் அரசியல் அதிகாரத்தில் இருந்து மக்களால் தூக்கி வீசப்பட்ட போது எம்.பி. பதவி கூட இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டார் மஹிந்த ராஜபக்ஷ. அப்போது இந்த விகாராதிபதிதான் தமது விகாரையில் மஹிந்த ராஜபக்ஷ அரசியல் அலுவலகம் அமைத்துச் செயற்பட இடமளித்தவர். 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காகப் பக்கத்தில் உறுதியாக நின்றவர். இப்போது கோட்டாபய ஆட்சிப் பீடத்தைக் கடுமையாக விமர்சிக்கின்றார் அவர்.**

**அதேபோல இலங்கையில் தேசாபிமானம் மிக்க பௌத்த மதத் தலைவர் என்று தென்னிலங்கையில் மிகவும் மதிக்கப்படுபவர் வண. எல்லே குணவன்ஸ தேரர். கடந்த தேர்தல்களில் ராஜபக்ஷக்களின் மீளெழுச்சிக்கு அளவு கடந்த ஆதரவளித்தவர். இன்று ஆட்சி அதிகார பீடத்தையே பெரிதும் குறை சொல்கின்றார்.**

**இந்த வரிசையில் அடுத்தவர் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நிலையெடுத்த அவர், இப்போது பகிரங்கமாக ஆட்சித் தலைமையைப் பிய்த்து உதறுகின்றார். அவரது சீற்றத்துக்கான காரணங்களை இரண்டு தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் பார்த்தோம்.**

**கோட்டாபய ராஜபக்ஷவின் செல்வாக்கும், ஆதரவு அலையும் சுருங்கிச் சரிந்து வருகின்றமை கண்கூடாகத் தெரிகின்றது. இதற்குக் காரணம் என்ன?**

**நிறைவேற்றதிகார ஜனாதிபதியைப் பதவியை வைத்திருந்த முன்னைய தலைவர்களும் காலப்போக்கில் தங்களது செல்வாக்கை இழந்தனர் என்பது உண்மையே. ஆனால் இவரைப் போல – கோட்டாபயவை போல – இவ்வளவு சீக்கிரத்தில், பதவியேற்று ஒன்றரை வருட காலத்திலேயே, அவர்கள் யாரினதும் செல்வாக்கு வீழ்ந்து விடவில்லை.**

**அவர்களும் இவரைப்போல – கோட்டாபயவைப் போல – சர்வதிகாரம் புரிந்தனர்தான். ஆனால் அவர்களுக்கு அரசியல் நன்கு தெரிந்திருந்தது. புரிந்திருந்தது. அதனால் தமது நிறைவேற்றதிகார சர்வாதிகாரத்தையும் அரசியல் ஆளுமை, அணுகுமுறையோடு அவர்கள் முன்னெடுத்தனர்; கையாண்டனர்.**

**ஆனால் கோட்டபாய ராஜபக்ஷவுக்கோ அரசியலை அரசியலாகச் செய்யத் தெரியவில்லை. அதையும் நிறைவேற்றதிகாரம் என்ற சர்வாதிகாரத்தின் ஒரு பங்காக அவர் முன்னெடுக்கின்றார். அரசியல் செயற்பாடுகளை நேரடியாக சர்வாதிகாரத்தின் அங்கமாக மேற்கொள்கின்றார். அவரின் இராணுவத்தனமான போக்கில், அவரின் அரசியல் நடவடிக்கைகள் சுருங்கிப்போகின்றன.**

**அதனால் மக்கள் வெறுப்புக்கு ஆளாகும் அரசியல்வாதியாக அவர் மாறிவருகின்றார்.**

## சிறிதரனின் அலுவலகத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிய பொலிஸார்

தியாகி பொன் சிவகுமாரனின் 47 ஆவது நினைவு நாளான நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் அலுவலகமான அறிவகத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறலாம் என்ற அச்சத்தில் பொலிஸாரும், புலனாய்வுத் துறையினரும் அவரது அலுவலகததுக்குச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகமான அறிவகத்தில் மாலை 4.30 மணியளவிலிருந்து 5.30 மணி வரை பொலிஸாரும், புலனாய்வுத் துறையினரும் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை,தியாகி பொன் சிவகுமாரனின் 47 ஆவது நினைவு தினத்தில் நேற்று முன்தினம் காலை நினைவுத்தூபியில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அஞ்சலி செலுத்த முயற்சித்தபோது, மிக அத்தியாவசிய தேவை தவிர்ந்தவைக்கு பயணத்தடை உள்ளமையால் சுகாதார ரீதியிலான கார ணங்களின் அடிப்படையில் மட்டுமே தாம் தடையேற்படுத்துகிறோம் என பொலி ஸார் தெரிவித்தமையை அடுத்து பொது இடத்தைத் தவிர்த்து பிரத்தியேக இடத்தில் விளக்கேற்றி தவிசாளரால் அஞ்சலிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## உலை எண்ணெய் நிரம்பி வழிவதை எண்ணெய்க் கசிவாக கருதமுடியாது

### சங்கச் செயலர் மறுப்பு

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் குழிகள் மற்றும் தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் எரிபொருள் விடயத்தில் போதிய மேற் பார்வையின்மை காரணமாகவே சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் உலை எண்ணெய் நிரம்பி வழிந்ததாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கமான தேசிய சேவை சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

இந்த எண்ணெய் நிரம்பி வழிவது எண்ணெய் கசிவு என்று கருத முடியாது. கச்சா எண்ணெயாகக் கருதப்படுகிறது.

இந்த எண்ணெய் குழிகள் சரியான மேற்பார்வை செய்யப்பட வேண்டும், ஏனெனில் அவை நிலத்தடியில் சேமிக்கப்படுகின்றன என்று ஆனந்த பாலித குறிப்பிட்டார்.

இந்தநிலையில் இப்போது நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது. இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல் படை அதிகாரிகள் வெள்ளநீரில் இருந்து உலை எண்ணெயைத் தவிர்ப்பதற்கும், மேலும் பரவாமல் தடுக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார வழிகாட்டல்களை மீறி வவுனியாவில் நடந்த வியாபாரம்



வவுனியாவில் சுகாதார கட்டுப்பாடுகளை மீறி இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் முகமாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் திடீர் சோதனை நடவடிக்கையொன்றை முன்னெடுத்திருந்தார்.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் ஐஸ் கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்ட வாகனத்தை வழிமறித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஐஸ் கிறீம் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் பின்பற்றிய சுகாதார நடைமுறைகளின் குறைபாடுகளை சுட்டிக்காட்டியமையுடன், அனுமதியின்றி வியாபாரத்தில் ஈடுபட வேண்டாம் எனவும், வியாபாரத்தில் ஈடுபட முறையான அனுமதியைப் பெற வேண்டும் எனவும் தெளிவுபடுத்தி வியாபாரத்தில் ஈடுபட்ட வாகனத்தை திருப்பி அனுப்பியுள்ளார். இதனையடுத்து வேப்பங்குளம் பகுதியில் உள்ள ஐஸ் வியாபார நிலைய உரிமையாளரை அழைத்து தற்போதும் வியாபாரத்தில் ஈடுபடுகின்றீர்களா என வினவியதுடன், குறித்த விற்பனை நிலையத்தின் பெயரில் அனுமதியின்றி வேறு நபர்களால் பயணத்தடை நேரத்தில் மேற்கொள்ளப்படும் வியாபார நடவடிக்கைகளை நிறுத்துமாறும், முறையான அனுமதியைப் பெற்றால் மாத்திரம் வியாபாரத்தில் ஈடுபட முடியும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், பண்டாரிக்குளம் பகுதியில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட வாகனத்தை வழிமறித்து அந்த வாகனத்தில் விற்பனை செய்யப்படும் மரக்கறிகளின் விலைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டமையுடன், சரியான கட்டுப்பாட்டு விலையைப் பேணுமாறும் அதனை மீறி விற்பனை செய்தால் அனு மதி ரத்து செய்யப்படும் எனவும் இதன்போது அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

## கொவிட் நடவடிக்கைகளுக்கு 28,600 கோடி ரூபா செலவாம்

### அரசு அறிவிப்பு

அரசாங்கம் இதுவரை பொது மக்களுக்கான நலன்புரி நோக்கங்கள் உட்பட கொவிட்-19 தொடர்பான நடவடிக்கைகளில் 28,600 கோடி ரூபா செலவிட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

தொற்றுநோயின் ஆரம்பத்திலிருந்தே மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா மற்றும் தடுப்பூசி திட்டம் உள்ளிட்ட தேவைகளுக்காக 13 ஆயிரம் கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். இந்த நடவடிக்கைக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் எழுந்த போதிலும் 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கான முயற்சி வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரை 40 லட்சம் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்க முடிந்துள்ளது என்று அமைச்சர் கூறினார் .

இதற்கிடையில், நாட்டில் உள்ள தடுப்பூசி மையங்களில் ஏற்பட்ட தவறுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, எனவே எதிர்காலத்தில் தடுப்பூசி இயக்கத்தை மிகவும் பயனுள்ள முறையில் மேற்கொள்ள முடியும் என்று கெஹலிய குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையை நேற்று வந்தடைந்தன பத்து இலட்சம் டோஸ் 'சினோபோர்ம்'

## அடுத்த வாரம் மேலும் 10 லட்சம் தடுப்பூசிகள்




சீனாவில் இருந்து மேலும் ஒரு மில்லியன் (பத்து லட்சம்) டோஸ் 'சினோபோர்ம்' தடுப்பூசிகள் இலங்கையை வந்தடைந்துள்ளன.

நேற்று காலை 5.10 மணியளவில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் 869 விமானத்தின் மூலம் குறித்த தடுப்பூசிகள் சீனாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதையடுத்து குறித்த தடுப்பூசிகள், அரச ஔடதங்கள் கட்டுப்பாட்டு நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டு, பின்னர், அரச மத்திய ஔடத களஞ்சியத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இதன்படி, ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையிலான 'சினோபோர்ம்' தடுப்பூசிகள் நாட்டுக்குக் கொண்டுவரப் பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவென சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மேலும் ஒரு மில்லியன் (பத்து லட்சம்) டோஸ் 'சினோ போர்ம்' தடுப்பூசிகள் எதிர்வரும் 9ஆம் திகதி நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மேலும் கூறினார்.

இதேவேளை, இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் 'சினோபோர்ம்' தடுப்பூசிகளை இலங்கைக்குச் சீன அரசு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 8 மாவட்டங்களில் 'டெங்கு' அபாயம்!



கொழும்பு, ஜூன் 06

நாட்டில் தற்போது நிலவும் அதிக மழையுடனான காலநிலையால் எட்டு மாவட்டங்களில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்த போதிலும் கடந்த மே மாதத்தில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் நீர் தேங்குவதன் காரணமாக எதிர்வரும் ஒரு மாதத்தில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரை நாட்டில் 7 ஆயிரத்து 873 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# தடையை மீறி நடமாடிய மேலும் 995 பேர் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 07

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாட்டை மீறி நடமாடிய குற்றச்சாட்டில் மேலும் 995 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று காலை 06.00 மணியுடன் நிறைவு பெற்ற கடந்த 24 மணி நேரத்தில் இவ்வாறு தனிமைப்படுத்தல் விதிகளை மீறி நடமாடிய குற்றச்சாட்டில் 995 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களில் அதிகமானோர் மாத்தளைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய மாத்தளை மாவட்டத்தில் நேற்று தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 138 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர கண்டி பிரதேசத்தில் 129 பேரும், நிக்கவரட்டிய பிரதேசத்தில் 75 பேரும் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என மேலும் தெரிவித்தார்.

இதையடுத்து கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 23 ஆயிரத்து 945 ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### யாழில் இனி தடுப்பூசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) 92 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 48 மரணங்கள் பதிவாகியுள்ளன. நல்லூர் மற்றும் உடுவில் பகுதிகளில் 3 கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

யாழில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கெனக் கிடைத்த நிதியில் 59 ஆயிரம் குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்துக்கான இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் எதிர்வரும் 10ஆம் திகதியில் இருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

பொதுமக்கள் சிலர் அதிருப்தி அடைந்துள்ளனர். தடுப்பூசி வழங்கும் முதற்கட்ட நடவடிக்கை நிறைவடைந்துள்ளது. 49 ஆயிரத்து 577 பேருக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன – என்றார்.

### பயணக் கட்டுப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மக்கள் நாட்டில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் தமது ஒத்துழைப்பைச் சுகாதாரத்துறைக்கு வழங்க வேண்டும்.

பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள காலகட்டத்தில் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தால் மட்டுமே ஜூன் 14 அன்று நாட்டை மீண்டும் திறக்க முடியும்.

அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறிச் செல்ல வேண்டும் – என்றார்.

### ஜூன் 21 வரைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகதிவரை நீடிக்குமாறு அரச உயர்பீடத்திடம் சில சுகாதாரத் தரப்புகள் கோரிக்கை முன்வைத்துள்ளன.

எனினும், இது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

அதேவேளை, நாட்டில் இன்று முதல் பயணத்தடை விதிமுறைகள் கடுமையாக அமுல்படுத்தப்படவுள்ளன.

### யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் நிலைய மோட்டார் சைக்கிள் அணியினரால் யாழ். நகரப் பகுதிகளில் நேற்று விசேட ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் கச்சேரிப் பகுதி, பாசையூர், குருநகர் பகுதிகளில் பொலிஸாரால் குறித்த விசேட ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பயணத் தடை அமுலில் உள்ள வேளையில் தேவையற்று நடமாடியவர்கள் கடும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

### உயிரிழந்த நிலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரினங்கள் பல உயிரிழந்த நிலையில், கரை ஒதுங்கி வருகின்றமை சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கவலையை மேலும் அதிகரித்துள்ளது.

இதுவரை இலங்கையின் புத்தளம் முதல் மிரிஸ்ஸ வரையான கடற்கரைப் பகுதியில் பத்து ஆமைகள், ஒரு டொல்பின், கடற்பறவைகள், பல மீன் இனங்கள் இவ்வாறு உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கியுள்ளன என்று வனவிலங்கு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆமைகள் உஸ்வெடகெய்யாவ, பாணந்துறை, உனவட்டுன, வெள்ளவத்தை, மொரட்டுவை மற்றும் இந்துருவ கடற்கரைகளில் கரை ஒதுங்கியுள்ளன.

இதில் ஏற்கனவே உனவடுன கடற்கரையில் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்ட இரண்டு ஆமைகளும் இதில் அடங்குகின்றன.

பாணந்துறை மற்றும் வெள்ளவத்தை ஆகிய கடற்கரைகளில் இறந்து கிடந்த பெரும்பாலான ஆமைகளின் ஓடுகள் உடைந்த நிலையில் காணப்பட்டன.

இந்தக் கப்பல் விஷப் பொருள்களுடன் எரிந்தமையால் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பை அரசு மதிப்பீடு செய்து வருகின்றது

### நல்லூர் அரசடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பத்து நாள்களுக்கு முன்னர் நல்லூர், அரசடிப் பகுதியில் 22 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதன் அடிப்படையில் அப்பகுதி தனிமைப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனைக்காக 154 மாதிரிகள் பெறப்பட்டன. இந்த மாதிரிகளிலேயே 55 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனால் குறித்த பகுதியைத் தொடர்ந்தும் முடக்க நிலையில் வைத்திருப்பதோடு அப்பகுதி மக்கள் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அங்கு தனிமைப்படுத்தல் பிரதேசம் மேலும் அதிகரிக்கும் சூழ்நிலையும் காணப்படுகின்றது.

இதேசமயம் வடக்கு மாகாணத்தில் மேலும் 140 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 588 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் 98 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது. (யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு – 71 பேர், அளவெட்டியில் – 09 பேர், மானிப்பாயில் – ஒருவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் – 09 பேர், பருத்தித்துறையில் – 04 பேர், சங்கானையில் – இருவர், சாவகச்சேரியில் – இருவர்)

வவுனியாவில் 30 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 09 பேருக்கும் தொற்றுறுதி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 03 பேருக்கும் நேற்று தொற்றுறுதியாகியுள்ளது.

### யாழில் இருவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொக்குவிலைச் சேர்ந்த 85 வயதுடைய வயோதிபர் ஒருவர் கொரோனா சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்துள்ளார்.

நேற்று அளவெட்டியைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

### 2, 976 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 5 ஆயிரத்து 333 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 304 ஆக உயர்வடைந்துள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 333 ஆக அதிகரித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# மெய்நிகர் வகுப்பறை 23


## Online Classroom

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் முடங்கியிரு, தனித்திரு, பாதுகாப்பாக இரு என்ற முழக்களைக் காணலாம். தனியாக வாழ்வது சிரமமானது என்பது உணரப்படுகின்றது. தனித்திருந்தாலும் நண்பர்களுடனும் குடும்பத்தினருடனும் அரட்டை யடிக்க, அவர்களை நேரில் காண, முகம் பார்க்க விரும்புகின்றோம். அதற்கு இன்று வளர்ச்சிய டைந்திருக்கின்ற தகவல் தொழில்நுட்பம் பெரிதும் உதவுகிறது.

தனிமையைப்போக்க நாம் காணும் ஒரே வழியாக 'வீடியோ அரட்டை' வசதி இருக்கிறது. இதற்காக பலரும் உச்சரிக்கும் ஒரு தாரக மந்திரம் 'சூம்...சூம்' என்பதாகும்.

அண்மையில் ஒரு நண்பர் கேட்டார் "கொஞ்சக்காலத்துக்கு முன்னம் எங்கடயாக்கள் செத்த வீடு, கலியாண வீடு எல்லாத்திற்கும் ஸ்கைப்.... ஸ்கைப் என்று உயிரைவிட்டினம். உந்த ஸ்கைப் பிற்கு என்ன நடந்தது?" – என்று கேட்டார்.




அவர் சொன்னதும்தான் ஞாபகம் வந்தது. பல செத்தவீடுகளில் தூரதேசங்களில் உள்ள உறவுகளோடு சேர்ந்தழுகிறதுக்கு சவப்பெட்டியில பிரேதத்தின்ர கால்மாட்டில் லப்டொப்... வைச்சு ஸ்கைப் வீடியோ இணைப்பு வசதியைப் பயன்படுத்தி அதுக்கு முன்னால நின்று நெஞ்சில அடிச்சு அழுததைப் பார்த்திருக்கிறம். சில நேரம் ஒரு வேகத்தில லப்டொப்பில அடிச்சு அழுது, லப்டொப் மூடுப்பட்டு ஸ்கைப் இணைப்பு துண்டிக்கப்பட்டுப் போயிடும். பிறகு மீண்டும் ஸகைப் இணைப்பு எடுக்க சிரமப்பட்டதையும் பார்த்திருக்கிறம். இவ்வளவுக் கும் சாவிலயும் வாழ்விலயும் ஒன்றாய் இருந்த ஸ்கைப் திடீரெனக் காணாமல் போய் விட்டது. இப்ப சூம் வந்திருக்கு. ஏன் இந்த நிலை? நண்பர் கேட்டது நியாயமாப்பட்டது.


மென்பொருள் மற்றும் செயலிகள் பயன்பாடுகள் உள்வருவதும் வெளியேறுவதுமாகவே இருந்து வருகின்றன. ஓர் காலத்தில் மைக்ரோசொவ்ட் ஒபிஸ் மட்டுமே செயலாக்க தீர்வு என்று நாங்கள் கணணியைக் கற்க ஆரம்பித்த காலத்தில் நினைத்தது நினைவிருக்கிறது. பின்னர் கூகிள் அதன் சொந்த சேவைகளுடன் இலவசமாக வெளிவந்தது. அது வியப்பில் ஆழ்த்தியது. எம்.எஸ். ஒபீஸ் இன்னும் பெரிய வணிகமாக நிலைத்திருக்கிறது. மேலும் பலருக்கு இது இன்னும் முதன்மை அலுவலக மென்பொருள் தொகுப்பாகும். ஆனால் வீடியோ அழைப்பிற்காக அறிமுகமான ஸ்கைப் நின்று நிலைக்கவில்லை. என்ன நடந்தது?

2003 ஆண்டு அதிவேக இணைய இணைப்புகள் அதிகமான மக்களின் வீடுகளில் அறிமுகமாகின. இது இணையத்தில் வீடியோ மற்றும் குரல் அழைப்பை ஒரு நிலையான அடிப்படையில் செய்ய மிகவும் எளிதானது. ஸ்கைப் என்ற பெயரில் ஒரு சிறிய நீல நிற செயலி மிகவும் பிரபலமான தகவல் தொடர்பு பயன்பாடுகளில் ஒன்றாக மாறியது. இந்த செயலி உடனடி செய்தி மற்றும் வீடியோ மற்றும் குரல் அழைப்பு திறன்களை ஒருங்கிணைத்து, மென்பொருள் வெற்றி பெற்றது. 'இலவச' அழைப்புகளுக்காக ஏராளமான மக்கள் இதனைப் பயன்படுத்தினர். இதன் வெற்றி காரணமாக, 2011 ஆம் ஆண்டில், மைக்ரோசொவ்ட் ஸ்கைப்பை 8.5 பில்லியன் டொலருக்கு வாங்கியது, மேலும் இது எதிர்கால தொடர்பாடல் பயன்பாட்டின் சர்வவல்லமை கொண்டதாக மாறும் என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் அது அவ்வாறு நடக்கவில்லை. பின்னர் ... ஏதோ நடந்தது. ஸ்கைப் அப்படியே வழியிலேயே விழத் தொடங்கியது.

இதற்கிடையில் கமராக்கள் கொண்ட தொலைபேசிகள் வெளிவந்தன. அவை மக்கள் வீடியோ அழைப்புகளைச் செய்ய அனுமதித்தன. இதன் ஆரம்பம் நோக்கியா இ 71 (Nokia E71) எனலாம். ஆனால் ஆப்பிள் ஐபோனுக்கான ஃபேஸ்டைமை (Face Time) அறிமுகப்படுத்தும் வரை தொலைபேசிகளில் வீடியோ அழைப்பு உண்மையில் பெரிய விடயமாக மாறவில்லை.


ஆப்பிள் IOS உடன் ஃபேஸ்டைம் செயல்படும் விதம் ஸ்கைப்பை விட பயன்பாட்டை மிகவும் எளிதாக்கியது. இதனால் ஸ்கைப் தன்பயணத்தில் தடைப்படத் தொடங்கியது.

இதன் பின்னர் 2013இல் சூம் அறிமுகமானது. 2020இல் கொரோனா தொற்றுக்காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியான சூழலில் சூம் ஸ்கைப்பை முந்திச் சென்றது.




ஸ்கைப் ஓடியோ தொடர்புக்கான ஒரு மென்பொருளாகவே தொடங்கியது, பின்னர் வீடியோ தொடர்புக்கான வசதிகள் இணைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. இருந்தாலும் இந்த வசதிகள் பல கட்டண அடிப்படையானவையாகவே காணப்பட்டன.

ஆனால், சூம் ஆரம்பமே வீடியோ தொடர்பாடலுக் கான மேம்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்டதாக இருந்தது. பல இலவச அம்சங்களை ஆது வழங்கியது. அதாவது குழு வீடியோ அழைப்புகள் இலவசமாக காணப்பட்டன. முன்பு ஆரம்பத்தில் ஸ்கைப்பில் கட்டணத்திற்காகவே இந்த வசதிகள் காணப்பட்டன. பின்னர் சந்தையில் நிலவிய போட்டி காரணமாக ஸ்கைப் இந்த கட்டண அம்சங்களை இலவச அம்சங்களாக மாற்ற முடிவு செய்தது.




ஸ்கைப்பின் தொழில்நுட்பக் குறைபாடுகளை நன்கு ஆய்வு செய்து பல சாதனங்கள் மற்றும் தளங்களில் சிறப்பாக செயல்படும் உலகளாவிய பயன்பாட்டின் அவசியத்தை சூமின் மேம்பாட்டுக் குழு நன்கு அறிந்திருந்தது என்று கூறலாம். இதில் முக்கியமானதாக இருந்தது, ஸ்கைப்பைப் போல மென்பொருளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவதில் உள்ள சிரமத்தைத் தவிர்த்து, அதாவது பதிவுபெறுதல் அல்லது நிறுவல் தேவைகள் இல்லாமல் பயனர்களை உடனடியாக சேவையைப் பயன்படுத்துவதற்கு சூம் முன்னுரிமை அளித்தது. அதாவது ஒரு ருசுடு மற்றும் வலை உலாவி மூலம் உடனடியாக வீடியோ அழைப்பில் சேரலாம். குறிப்பாக ஸ்கைப்பின் தோல்விக்குக்காரணம். வாடிக்கையாளரின் வசதிக்காக அவர்கள் போதுமான கவனம் செலுத்தவில்லை என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

இன்று காணப்படும் ஒரு கொந்தளிப்பான சூழலில் பல மில்லியன் பயனர்கள் ஒரே நேரத்தில் அணுகக்கூடிய, இணைப்பை ஏற்படுத்தும் தொழில்நுட்பம் தேவை, இந்த வசதிகளின் மேம்பாட்டில் சூம் கவனம் செலுத்துமளவிற்கு ஸ்கைப் கவனம் செலுத்தவில்லை எனலாம்.

அதாவது ஸ்கைப்பை விட சூம் மிகவும் எளிதானது. வீட்டிலிருந்து வேலை செய்தல், வெபினார்கள், வீடியோ கான்பரன்சிங் போன்ற தேவைகள் அதிகரிக்க அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஸ்கைப் காணாமல் போய்விட்டது.

ஸ்கைப் மென்பொருள் டெஸ்க்டாப்பிலோ அல்லது மொபைலிலோ இருந்தாலும் மிகவும் நம்பகமான பயன்பாடுகளாக இருக்கவில்லை. விண்டோஸ், மேக், URL மற்றும் ஆண்ட்ராய்டு போன்ற பல தளங்களில் இதைப் பயன்படுத்தும் போது இடையூறில்லாமல் பயன்படுத்த முடிந்ததில்லை. இதனால் அது நம்பிக்கையை இழந்தது. ஒவ்வொரு முறையும் ஸ்கைப்பைத் திறக்கும்போதும் சிக்கல்கள் இருக்கும். இது 2003 இல் வெளியானதிலிருந்து, பல மாற்றங்களுக்கு உட்பட்டு தனது சேவையை சிறப்பாக செய்ய முற்பட்டு தற்போது முடிவுறுநிலைக்கு வந்துள்ளது. தற்போது ஸகைப்பின் உரிமையாளர்களான மைக்ரோசொவ்ட் நிறுவனம் மைக்கிறோ சொவ்ட் ரீம் மென்பொருளை அறிமுகம் செய்வதிலும் பயன்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்துகிறது. இருந்தாலும் ஸ்கைப் இன்னும் தனக்கான பயனர்களைக் கொண்டுள்ளது. இன்றும் பல நபர்களுக்கான நபருக்கு – நபர் வீடியோ அரட்டை மென்பொருளாகவுள்ளது.

(தொடரும்......)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத் தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர்.

'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர்.

இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப் புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனி தாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன் றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்


அங்கம் 27

### 92. எவ்விதமான கோடுகள்?

அந்த கோடுகளை உணர்ந்து கொள்ள, இந்த பின்னணிகளையும் புரிந்து கொள்ளவேண்டும். ஜே.ஆர். 19 மே 1983 சீனாவிற்குச் சென்றார். 16 ஜூன் 1983 அமெரிக்காவின் வொஷிங்டனுக்கு. அங்கிருந்து லண்டன். அதைத் தொடர்ந்து டெல்லி விஜயம். சென்ற இடமெல்லாம் அவர் பேசியது பயங் கரவாதம் பற்றியதே. காலை சிற்றுண்டி என்றால் என்ன, மதியச் சாப்பாடோ, இரவு விருந்தோ அன்றில் மாலை தேனீரோ எவ்விடத்திலும் பயங்கரவாதம், என்பதே பேசினார்.

இந்தியா தங்கள் பிராந்தியத்தில் விசாலமாக இடம் பிடிக்க நினைப்பதால் இது இனி தமிழ் பிரச்சினை யல்ல, அது தமிழ்ப் பேரழிவே, ஆகவே சர்வதேச நாடுகள் ஆதரவு தரவேண்டும் என வேண்டினார்.

சீனாவிடம் தாங்கள் இருநாடுகளும் பௌத்தத் தின் தூண்கள், இந்தியாவின் ஆக்கிரமிப்பிலிருந்து இலங்கையின் பௌத்தம் பாதுகாக்கப்படவேண்டும் என்று மன்றாடினார். ஆனால் ஜே.ஆரை சீன அரசு அறிந்திருந்தது. ஆகவே பௌத்தம் என்பது அங்கு அவியவில்லை. அமெரிக்கா இவ்விடயத்தில் நேரடி யாக ஈடுபடுவதோ, அன்றில் ஆயுதப் படைகளைத் தருவதோ நடைமுறைச் சாத்தியமாகாது என்று ஸ்ரீலங்காவிலிருந்த அமெரிக்கத் தூதுவர் ஜோன் ரீட் சொல்லியிருந்தாலும் தனது நேரடி சந்திப்பு ஜனாதி பதி ரீகனை மாற்றும் என்ற நம்பிக்கையை ஜே.ஆர். கைவிடவில்லை.




ஆகவே ரீகனுக்கு பரிசாக 'ஜயத்து' – சிங்களத்தில் வெற்றி (Victory) என்ற 18 மாத யானைக் குட்டியை யும் கையோடு எடுத்துச்சென்று கையளித்தார். ரீகன் அவரை பல காங்கிரஸ் பிரதிநிதிகளையும் வெளியுறவு அரசியலுறவு அதிகாரிகளையும் சந்திக்க வைத்தும், அவர்கள் படை உதவி என்பது சிரமம், இந்தியா இந்த இனப்பிரச்சினையில் அக்கறையிலிருக்கும் வரை என்று சொல்லி கைவிரித்தார்கள். லண்டன், மேற்கத்தைய நாடுகளும் அதே பல்லவி பாடின. இந் தியாவுடன் பேசித் தீர்க்கப் பாருங்கள் என்று அவரு டைய வெந்த புண்ணுக்கு ஆறுதலும் கூறினார்கள்.

அந்த மனவருத்தங்களுடன் ஜே.ஆர். டெல்லி வந்தார். இந்திரா காந்தியுடனான இரண்டு நாள்கள் நடந்த பேச்சுக்களில் ஜே.ஆரிடம் அந்த தொனியே தென்பட்டது. இயலாமை எரிச்சலின்தான் தமிழ் மக் களோடு நேரடியாகப் பேசி அவர்களுக்கு ஒரு தீர்வை தருவேன், அது அவர்களுக்கும் எங்களுக்குமிடையே உள்ள உள்நாட்டுப் பிரச்சினை என்றார்.

ஆயினும், இந்திரா காந்தி, நீங்கள் பேசுகிற தீர்வு எதுவும் அவர்களது நியாயமான எதிர்பார்ப்புகளுக்குக் கிட்டவும் வருகிற மாதிரி தெரியவில்லை, இதுதான் எனதும் தமிழக மக்களின் கருத்தும் கூட. என்பதற்கு அது உங்களது மக்களின் எதிர்பார்ப்பும் அல்ல. நாங்கள் இரு பக்கமும் உள்ளடக்கி (ஈழத்தமிழர்) பேசி முடிவெடுக்க வேண்டியது என்று மழுங்கடித்தார்.



'ஜயத்து' யானைக்குட்டி பரிசை ஏற்கும் ரேகன்

விஜயத்தின் முடிவில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றில் தான் தமிழ் மக்களோடு பேசி அவர்களுக்கு தரப்போகிற அதிகாரப்பரவல் தீர்வு பற்றி இந்திரா காந்தி அக்கறைப்படத் தேவையில்லை என்று நான் அவரிடமே சொல்லியுள்ளேன் என்றார். சந்திப்பின் முடிவில் ஜே.ஆர். வெளியிட்ட உத்தியோகப்பூர்வ அறிக்கையிலும் அவர் அதையே சுட்டிக்காட்டி, இது சிறிலங்காவின் உள்விவகாரம். சிறிலங்காவின் எல்லா இன மக்களும் சேர்ந்து தீர்க்க வேண்டியது என்பதை எடுத்துக்காட்ட இந்திரா காந்தியும் அதனை ஏற்றுக் கொண்டார் என்றிருந்தது.

இந்த பேச்சுவார்த்தையினை மையப்படுத்தி ஜே.ஆரின் திமிரையும் ஆணவத்தையும் பல சர்வதேச பத்திரிகைகள் விமர்சித்தன. லண்டனில் இருந்து வெளிவரும் 'ரைம்ஸ்' (Times - London) அதன் 3 ஆவது இதழில் இப்படி தலையங்கம் தீட்டி வெளி யிட்டது.



டெல்லியில் இந்திரா காந்தியும் ஜே.ஆரும்

"Mrs.Ghandhi warned. Not to middle in SriLankan" தொடர்ந்த பேட்டிகளில் தான் இந்தியாவிற்கு இந்திரா காந்தியின் அழைப்பிலேயே வந்திருக்கிறார் எனவும், அவரிடத்தில் சிறிலங்காவுக்கு எதிராக இந்தியாவிலிருந்து வரும் பத்திரிகை செய்திகள் அங்கு பயங்கரவாதிகளுக்கு ஊக்கம் கொடுக்கின்றன என்று தான் தெரிவித்தார் என வும், அவற்றை இந்திரா காந்தி சிரத்தையாகக் கேட்டுக் கணக்கெடுத்து கொண்டார் என்றும் அறிவித்தார்.

### 93. இவற்றிக்கு இந்திரா காந்தி ஏதும் பதில் தந்தாரா?

சில பேட்டிகளில், மிக சுருக்கமாக பேசப்பட்ட விடயங் களில், தான் இந்தியாவின் தரப்பில் எந்தத் தீர்வையும் முன்வைக்கவில்லை, ஆனால் எமது மக்களும் அதில் அகப்படுவதாலும், பல அகதிகள் இங்கு வருவதாலும், நாம் அக்கறையில்லாது இருக்க முடியாது, இரண்டு தரப்பினரும் பெருவாரியாக பிரிந்து விட்டனர், எமது நல்லெண்ணத் தூதினால் ஒரு இணக்கத்தை ஏற்படுத்த பார்க்கிறோம் என்றார்.

ஆனால் இரு தரப்புப் பேச்சுக்கள் திருப்திகரமாக அமையவில்லை, எனினும் ஓர் இணக்கத்திற்கு வர வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. ஆனால் இந் திய தரப்பால் எந்த விதமான வன்முறைகளையும் தாங்கள் ஆதரிக்கவில்லை, பயங்கரவாதத்தை ஊக்கு விக்கவில்லை என்றும் அறிக்கை தரப்பட்டது.

இவற்றுக்கு மகுடம் சூட்டுவது போல இந்திரா காந்தி யிடம் "உங்களிடம் சிறிலங்கா அதிகாரிகள் தாங்கள் அக்கறை கொண்ட பயங்கரவாதிகளை இங்கு அகதி கள் போல தஞ்சம் கோரியிருந்தாலும் அவர்களை நாடு கடத்தி கையளிப்பீர்களா என்று கோரினால்?" – என நேரடியாக கேட்கப்பட்டது. இது, பாண்டிபஜாரில் பிரபா கரனுக்கும் உமா மகேஸ்வரனுக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையின் பின்னர் இருவரும் பிணையில் இருந்தா லும், சிறிலங்கா அவர்களைக் கேட்டும் இந்திரா காந்தி யின் பணிப்பில் நாடுகடத்தாதிருந்ததைக் குத்திக்காட் டுவதற்காக எழுப்பப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# நமோ நமோ சீனா!

# இனி எல்லாம் சீனா!



பனங்காட்டான்

> சர்வாதிகாரத்துக்கு இன்னொரு ஜே.ஆராக விளங்கும் கோட்டாபய ராஜபக்ஷ, அந்தக் கதிரையில் ஏறிய ஒன் றரை வருடங்களுக்கிடையிலேயே மக்கள் விரோதியாக மாறி, அவரைத் தெரிவு செய்த சிங்கள மக்களாலேயே வெறுக்கப்படுகின்றவராகியுள்ளார்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் முக்கியமான ஒன்று. நாடளாவிய ரீதியில் ஆறில் ஐந்து கணக்கில் வெற்றி பெற்ற ஐக்கிய தேசிய கட்சி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றியது.

பிரித்தானியாவிடமிருந்து இலங்கை விடுபட்ட பின்னர் உருவான டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான முதலாவது அரசாங்கத்தில் நிதி அமைச்சரான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, அதற்கு முன்னரே சட்ட சபை உறுப்பினராகவும் இருந்தவர்.

1906ஆம் ஆண்டில் பிறந்த இவர் தமது 71ஆவது வயதிலேயே - தமது முதுமையை எட்டிய பின்னரே பிரதமர் பதவிக்கு வர முடிந்ததை வரலாற்றாளர்கள் பலவாறு விமர்சித்துள்ளனர். 1978ல் புதிய அரசமைப்பை உருவாக்கி, தேர்தல் இல்லாமலே தம்மை சகல நிறைவேற்று அதிகாரமும் கொண்ட ஜனாதிபதியாக்கினார்.

ஜனநாயகத்தை எவ்வாறு சர்வாதிகாரமாக்கலாம் என்பதை செயல்வழியாக மக்களுக்குக் காட்டிய ஜே.ஆர்., வயோதிபத்தை எட்டிய தமது 83வது வயது வரை (1989) ஜனாதிபதியாகவிருந்து, சகல சனவிரோத செயற்பாடுகளையும் அறிமுகப்படுத்திவிட்டு கட்டாய ஓய்வுக்குச் சென்றார். கிழட்டு நரி என்ற பட்டத்துடன் ஏழாண்டுகள் அதன்பின் அவரால் உயிர்வாழ முடிந்தது.

சர்வாதிகாரத்துக்கு தர்மிஷ்டர் என்ற பெயருண்டு என்ற விசித்திரத்தை இவரது ஆட்சிக்காலம் போதித்தது. இவரும் சரி, இவர் பின்னால் தலைமைப் பதவியை கைப்பற்றியவர்களும் சரி குறுகிய காலத்துக்குள் மக்கள் எதிர்ப்பைச் சந்திக்காத தந்திரமான ஆட்சியை கடத்திச் சென்றனர்.

சர்வாதிகாரத்துக்கு இன்னொரு ஜே.ஆராக விளங்கும் கோட்டாபய ராஜபக்ஷ, அந்தக் கதிரையில் ஏறிய ஒன்றரை வருடங்களுக்கிடையிலேயே மக்கள் விரோதியாக மாறி, அவரைத் தெரிவு செய்த சிங்கள மக்களாலேயே வெறுக்கப்படுகின்றவராகியுள்ளார் என்பது நாட்டின் வரலாற்றுப் பதிகையாகியுள்ளது.

தமது கதிரையைச் சுற்றி பல வலயங்களை இவர் உருவாக்கினார். ஒன்று - சகோதரர்கள் மற்றும் அவர்களின் பிள்ளை குட்டிகள் உறவினர்களாலானது. அடுத்தது - இராணுவத்தைத் தலைமையாகக் கொண்ட நம்பிக்கையான படைத்துறையினரைக் கொண்டது. மற்றது - தமக்கு ஏவலாளர்களாக இயங்கக்கூடிய அடிவருடிகள் கூட்டத்தை உள்ளடக்கியது. இவை தவிர வேறு சில சின்னச்சின்ன வலயங்களும் மறைப்புக்குள் உண்டு.

எனினும், விரும்பியவாறு, திட்டமிட்டவாறு, கட்டமைக்கப்பட்டவாறு எதனையும் செய்ய முடியாத ஒருவகை நெருக்கடிகள் அவரின் தலைக்குமேல் அடுக்கப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் சட்டங்களை இயற்றவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அப்படி இப்படியாக (பதவிகள், சன்மானம், சலுகைகள்) பெற்றுள்ளாராயினும், புறநிலையில் உருவாகி வரும் புதுப்புது நெருக்கடிகள் அகநிலையில் இருப்பினை நெருக்கடிக்குள்ளாக்குகின்றன.

இலங்கையின் கடல் எல்லைக்குள் தீப்பிடித்து மூழ்கிப்போன எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பற்றிய பல சந்தேகங்கள் கிளம்பியுள்ளன. அதற்குள்ளிருந்த எரிபொருள் கொள்கலன்கள், அது தீப்பற்றிய விதம், அதனை அணைக்க சர்வதேசம் முன்வராத காரணம் போன்றவைகள் தவிர இன்னும் பலவுண்டு. நாட்டின் கடல் வளம், மண் வளம், பொருளாதாரம் என்பவை பாதிக்கப்பட்டுள்ளன. இக்கப்பல் எரிந்ததால் சுற்றுலாப் பயணிகள் வருகை தடைப்படப் போகிறது என்று அமைச்சர் ஒருவர் ஏற்கனவே கூறிவிட்டார்.

இதற்கும் ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்று உருவாக்கப்படும். அக்குழுவின் அறிக்கை கையளிக்கப்படும். பின்னர் அது அப்படியே குளிர்சாதனப் பெட்டிக்குள் புகுந்துவிடும். கப்பல் வந்த வேலையும் முடிந்துவிடும். இதுதான் இலங்கையின் காலாதிகால வரலாறு. கப்பல் எரிந்த ரிஷிமூலம் இரண்டு நாடுகளின் உயர்மட்டங்களுக்கு மட்டுமேரகசியமாக இருப்பதாக பேசப்படுகிறது.

அரச நிர்வாகங்களில் படையினரை நியமித்து வந்த தடத்தில், இப்போது சில நீதி விசாரணைகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. போர்க்காலத்தில் பொலிஸ் மாஅதிபராக இருந்த சாந்தகுமார விக்கிரமரட்ண காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு ஒரு பதவி கொடுக்க வேறு குழுவொன்றும் கிடைக்கவில்லை போலும்!

கள்வனைக் கண்டுபிடிக்க கள்வனை நியமிப்பது போன்ற செயற்பாடு இது. காணாமலாக்கப்பட்டோர் எண்ணிக்கையில் உலகில் இரண்டாவது இடத்தில் இருக்கும் இலங்கையில் மட்டும்தான் நீதிக்கான விசாரணை என்ற பெயரில் இவ்வாறான அநீதிகள் இடம்பெறும். சர்வதேசம் கேட்கும் அனைத்துலக நீதி விசாரணை பொறிமுறையை மறுக்கும் இலங்கை அரசு, அதற்குச் சவாலாக இவ்வாறு நியமனம் செய்து இடைக்கால நீதிப் பொறிமுறையை பாழாக்குகிறது என்று சாடியுள்ளார் இத்துறைசார் நிபுணர் ஜஸ்மின் சூக்கா.

சமவேளையில், அமெரிக்க காங்கிரஸ் என அழைக்கப்படும் சனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான தீர்மானம் முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட 46/1 இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நீதி விசாரணையைக் கோருவதை வலுவூட் டும் வகையில் இந்தத் தீர்மானம் வரையப்பட்டுள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்தின் சகல அம்சங்களையும், மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் தமது அறிக்கையில் சுட்டிய அனைத்து சமர்ப்பணங்களையும் முழுமையாக ஆதரித்துள்ள இந்தத் தீர்மானம், இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களை தமிழரின் பாரம்பரிய தாய்மண் **(North Eastern region of the country, traditional Tamil homeland)** என்று குறிப்பிட்டிருப்பதை இலங்கை ஆட்சியாளர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தாங்கள் எதனை மறுத்துரைத்து வந்தார்களோ அது அமெரிக்க முன்றிலில் தீர்மானமாக வந்துள்ளதால் துடிக்கின்றனர், பொங்கி எழுகின்றனர்.

இதனைச் சும்மா விடப்போவதில்லை. அமெரிக்க காங்கிரஸுக்கும், அதன் வெளியுறவுக் குழுவுக்கும் இதனைக் கண்டித்து கடிதம் அனுப்பப் போவதாக அறிவித்திருக்கும் இலங்கை அரசு, புலிகளை மீளெழுச்சி கொள்ளச்செய்யும் செயற்பாடு இதுவென வழமைபோல மாலை சூட்டியுள்ளது.

இலங்கையை சீனாவுக்கு அடகு வைப்பது போன்று கொழும்பு துறைமுக நகரை அதற்குத் தாரை வார்க்கும்போது, பின்னால் இப்படியெல்லாம் நடைபெறுமென்பதை இலங்கை புரிந்திருக்க வேண்டும். சீனா வழங்கும் கோடானுகோடி கடன், பின்னால் வரப்போவதை எண்ணிப் பார்க்கவிடாது மறைத்துவிட்டது.

உள்நாட்டுக்குள் சீனா என்றால், வெளியுலகில் அமெரிக்கா தனது கூட்டு நாடுகளோடு சேர்ந்து (பிரித்தானியா, கனடா போன்ற) பிறிதான ஒரு பாதையில் தனது பயணத்தை தொடரும் என்பதை ஆட்சித் தரப்பினர் நினைக்கத் தவறி விட்டனர்.

இது தவிர, கொரோனா நெருக்கடி நாட்டின் மையத்தில் நின்று அனைவரையும் உலுப்புகிறது. இதற்கும் சீனாவிடமே தடுப்பூசி வாங்கும் நிலைமை தவிர்க்க முடியாது போய்விட்டது.

மருத்துவர்கள் குழு கையாள வேண்டிய நோய்த் தடுப்பை இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தலைமையிலான குழு கையாளப் போனதால் மக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். கண்ணுக்குப் புலப்படாத நோய்க்கிருமியை குண்டு போட்டும், துப்பாக்கியால் சுட்டும், வானத்திலிருந்து எரிபொருள் வீசியும் அழிக்கலாமென கோட்டா - சவேந்திரா இராணுவக் கூட்டு மூளை எண்ணியதன் விளைவை நாடு இப்போது சந்தித்துள்ளது.

இந்தவேளை பார்த்து, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசாங்கத்தை பகிரங்கமாகச் சாடி அறிக்கை விட்டுள்ளார். ஈஸ்டர் தாக்குதலில் ஆட்சித்தரப்பு அரசியல்வாதிகளுக்கு பங்கு இருப்பதை முதன்முறையாக பேராயர் பகிரங்கப்படுத்தியுள்ளார். கடந்த வாரம் ஓய்வு பெற்ற இலங்கையின் சட்டமா அதிபர் (இவர் ஒரு கத்தோலிக்கர்) இத்தாக்குதலின் விசாரணை அறிக்கையை முழுமையாக ஏற்க மறுத்த போதே, பின்னால் பல தகவல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்டதை பேராயரின் அறிக்கை தெரியப்படுத்துகிறது.

சுபீட்சமான எதிர்காலம் எனக்கூறி நம்பவைத்து வாக்குப்பெற்று ஆட்சிக்கு வந்தவர்கள், மக்களை ஏமாற்றிவிட்டனர் என்று நேரடியாக கோட்டாபயவையும், ராஜபக்ஷக்களையும் நோக்கி விரல் நீட்டியுள்ள மல்கம் ரஞ்சித், ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கிடைக்காவிடின் சர்வதேச நிறுவனங்களை நாட வேண்டிவரும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுவரை காலமும் சிங்கள அரசாங்கங்களின் சுவீகார குடும்ப நண்பராகவே இருந்த பேராயர், இப்போதுதான் அவர்களின் சுயரூபத்தை தெரிந்து கொண்டார் போலிருக்கிறது. இவரது கூற்று நடிப்பா இல்லை உண்மையா என்பதை அறிய சில காலம் காத்திருக்க வேண்டிவரும்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

# சுற்று சூழல் தின நடிகர் விவேக் நினைவு மரநடுகை தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் முன்னெடுப்பு





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் உலக சுற்றுச் சூழல் தினமான ஜுன் 5 ஆம் திகதி நடிகர் விவேக்கின் நினைவாக 'நடிகர் விவேக்கின் பணியில் நமது பங்கு, நாமும் நடுவோம் ஒரு மரம்' என்ற மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கொரோனா காரணமாக நாடு முடக்கப்பட்டிருப்பதைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தனது சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சியை இம்முறை இணையத்தின் ஊடாக ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஆண்டுக்குரிய சூழல் தினத்தின் 'இயற்கைக்குத் திரும்புதல்' என்ற கருப்பொருளுக்கு அமைவாக நடைபெற்ற இணையவழி உரையரங்கின் நிறைவில் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சம்பிரதாய பூர்வமாக மரக்கன்றுகளை வழங்கி வைத்து, மரக்கன்றொன்றை நடுகை செய்து இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இணையத்தில் சூம் செயலியின் ஊடாக உரையரங்கில் கலந்து கொண்டிருந்த நூற்றுக்கும் அதிகமானவர்கள் தத்தமது வீடுகளில் மரநடுகையில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக பொ. ஐங்கரநேசன் கருத்துத் தெரிவிக்கையில் –

நடிகர் விவேக் திரைத்துறையில் தனக்குக் கிடைத்த வெளிச்சத்தைப் பயன்படுத்திக் கட்டாந்தரையைப் பசுமையாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அப்துல் கலாம் அவர்களின் பணிப்புரையைச் சிரமேற்கொண்டு ஒருகோடி மரங்களை நடுகை செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அவர் இதுவரையில் முப்பத்திமூன்று லட்சத்துக்கும் அதிகமான மரங்களை நடுகை செய்துள்ளார். அவர் இறந்தபோது அவரின் ரசிகர்கள் மரக்கன்றுகளை நாட்டியே அவருக்குப் பசுமை அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர். இலங்கையிலுள்ள அவரது ரசிகர்கள் எம்மிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகச் சூழல் தினத்தில் நடிகர் விவேக்கின் பணியில் நமது பங்காக நாமும் நடுவோம் ஒரு மரம் என்ற திட்டத்தை இன்பத்தமிழ் வானொலியின் அனுசரணையுடன் ஆரம்பித்துள்ளோம்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் வடக்கில் வடமாகாண மரநடுகை மாதத்தைக் கார்த்திகை மாதத்தில் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. ஆனால், இது ஒரு தேசிய மரநடுகை நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. தொடக்கநாள் அன்று யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அல்லாமல் வவுனியா, மன்னார், மலையகம், கொழும்பு என்று இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் நூற்றுக்கணக்கானவர்கள் மரங்களை நாட்டிப் படங்களை எமக்கு உடனுக்குடனேயே அனுப்பி வைத்துள்ளனர். கொரோனா முடக்கம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இடம்பெற்றதால் இன்னும் ஒருமாதத்துக்கு இதனை நீடிக்க முடிவு செய்துள்ளோம். இக்காலப் பகுதியில் மரக்கன்றுகளை நடுகை செய்ய விரும்புகின்றவர்கள் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் இருந்து மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார்.

# தீக்கிரையான கப்பலின் கறுப்புப்பெட்டி மீட்பு

கொழும்பு துறைமுகத்தில் தீக்கிரையான எம்.வீ. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இந்த கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டதாகவும் அதனை குற்ற விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைதுள்ளதாகவும் காவல்துறை ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தால் கடல் பரப்பிற்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கப்பலின் 20 பணியாளர்களிடம் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

கப்பல் விபத்து தொடர்பான முக்கிய விவரங்களை இந்த கறுப்பு பெட்டியின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு வவுனியாவில் 5 ஆயிரம் ரூபா

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டது.

பிரதேச செயலாளர் கமலதாசனின் கண்காணிப்பின் கீழ், பண்டாரிக்குளம் கிராம அலுவலகர் சி.ராகுல்பிரசாத் தலைமையில், சமுர்த்தி உத்தியோகத்தர் விக்னேஸ்வரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சிவனேஸ்வரி ஆகியோரால் சமுர்த்தி பயனாளிகளுக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டது.

இதில் முதல் கட்டமாக சமுர்த்தி முத்திரை பெறும் 98 குடும்பங்களுக்கு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டது. சமுர்த்தி கொடுப்பனவு பெறுபவர்கள், தொழில் பாதிப்புற்றோர், சிரேஷ்ட பிரஜைகள், நோய் பாதிப்புக்குள்ளானவர்கள் உள்ளிட்ட குடும்பங்கள் என்பனவே இவ்வாறு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமோ நமோ சீனா!....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குள் கால்களைப் புதைத்து, கைகளை நீட்டி அகலமாக்கி, தெற்கில் இருந்து வடக்கு வரை தன்னை வியாபித்து, தனது இருப்பை நிலைநிறுத்தி, தனது மொழியையும் இலங்கையின் அரசகரும மொழியாக மாற்றியுள்ள சீனாவின் செயற்பாடுகளை, சிங்கள ஆங்கில ஊடகங்களும், சிங்களப் புத்திஜீவிகளும் இப்போது பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்துள்ளமையை இங்கு தவறாது குறிப்பிட வேண்டும்.

கொழும்பின் அதிமூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர் லூசியன் ராஜகருணநாயக்க. லேக்ஹவுஸ் வெளியீடான டெய்லி நியூஸ் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். இவர் சில நாள்களுக்கு முன்னர் கொழும்பு 'த ஜலண்ட்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்ட ஒரு வரி நிச்சயம் முக்கியமானவர்களின் பார்வைக்கு உட்பட்டிருக்கும்.

இலங்கையின் தேசிய கீதமான 'நமோ நமோ மாதா' என்பது விரைவில் 'நமோ நமோ சீனா' ஆகலாம் என்று லூசியன் எழுதியிருப்பதை வெறும் விகடமாகப் பார்க்க முடியவில்லை.

இதற்கு உடந்தையாக, அதே 'த ஜலண்ட்' பத்திரிகை ஒரு கார்ட்டூனை (கருத்துச் சித்திரம்) பிரசுரித்துள்ளது. சீனாவின் அதிகாரபூர்வ சின்னமான ட்ரகன் பொறிக்கப்பட்ட கொடியை மஹிந்தவும் கோட்டாபயவும் கைகளில் உயர்த்திச் செல்வதாக இக்கருத்துச் சித்திரம் வரையப்பட்டுள்ளது.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் தங்கள் தாய்மொழியில் இலங்கையின் தேசிய கீதத்தை பாட மறுத்துவரும் சிங்கள தேசம், நமோ நமோ சீனா என தங்கள் தேசிய கீதத்தை தாங்களே பாட நேருமென்று, அவர்களின் இனம்சார் ஊடகவியலாளர் ஒருவரின் பார்வையை வெறும் கருத்துருவாக்கமாகப் பார்க்கக்கூடாது.

இதனை ஆய்ந்து ஓய்ந்து அணுக வேண்டிய முக்கியத்துவத்தை ஆட்சியில் இருப்பவர்கள் உணரத் தவறின், புறநிலையில் உருவாகி வரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாது போகும். ஆட்சிக்கு வந்த ஒன்றரை வருடத்துக்குள் அவர்களை கதிரையில் ஏற்றியவர்களே இறக்க வேண்டிய செயற்பாட்டுக்கு உள்ளக நிலைமையும் உருவாகலாம்.

**நன்றி: 'பதிவு' இணையம்**

# கொழும்புக்கு வரும் வாகனங்களுக்கு புதிய ஸ்ரிக்கர் முறை அறிமுகமானது



அத்தியாவசியப் பொருள்களுடன் போக்குவரத்து செய்யும் வாகனங்களுக்கு விசேட ஸ்டிக்கர் முறைமை ஒன்று அறிமுகம் செய்யப்பட உள்ளது.

பயணத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ள காலப் பகுதிகளில் கொழும்பு நகரிற்குள் பிரவேசிக்கும் வாகனங்களுக்கு வழங்கப்பட்ட ஸ்டிக்கர்கள் ஒரு நாளைக்கு மட்டுமே செல்லுபடியாகும் வகையிலானது.

இந்த ஸ்டிக்கர் முறைமைக்கு பதிலாகப் புதிய ஸ்டிக்கர் முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளது. இன்று முதல் இந்த புதிய ஸ்டிக்கர் நடைமுறை அமுலாகும் என காவல்துறை ஊடகப் பேச்சாளர் பிரதிக் காவல்துறை மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரிற்குள் பிரவேசிக்கும் இடங்களில் தங்களது பூரண விவரங்களை வழங்கியதன் பின்னர் இந்த ஸ்டிக்கர் வழங்கப்பட உள்ளது.

# தொற்றாளர் இருவர் கிளிநொச்சியில் சாவு

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் இருவர் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் கரைச்சி சுகாதார வைத்திய பிரிவில் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கண்டாவளை சுகாதாரப் பிரிவில் கண்ணகிபுரம், புன்னைநீராவி என்ற முகவரியைச் சேர்ந்த 67 வயதுடைய நல்லதம்பி சிவபாக்கியம் என்பவர் உயிரிழந்துள்ளார். இதேவேளை, கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பெரிய பரந்தன் என்ற முகவரியைச் சேர்ந்த 46 வயதுடைய மு.சிறீகாந்தன் என்பவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## விவசாய பல்கலைக்கழகங்களும் பட்டப்படிப்பும்

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றில் விவசாயம் சார்ந்த பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் விவசாய முகாமைத்துவமும் தொழினுட்பவியலும், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் ஆகிய பட்டப்படிப்புப் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

மேலும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் விலங்கியல் பாடநெறி, ஏற்றுமதி விவசாயப் பட்டப் பாடநெறி, தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்த்தலும் ஆகியனவும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினால் உணவு விஞ்ஞானமும் தொழினுட்பமும் எனும் கற்கைநெறியும் வயம்ப பல்கலைக்கழகத்தினால் உணவியலும் போசாக்கும் எனும் கற்கைநெறியும் நடாத்தப்படுகின்றன. கொழும்பு மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் மூலம் விவசாயம் சார்ந்த சான்றிதழ் கற்கைநெறிகளும் டிப்ளோமாக் கற்கைநெறிகளும் நடத்தப்படுகின்றன.

மேலும், பேராதனை, றுகுணு பல்கலைக்கழகங்களில் விவசாயம் சார்ந்த பட்டப்பின் கற்கைநெறிகளும் நடத்தப்படுகின்றன.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல் நோக்கத்துக்காக மக்களைக் குழப்பும் தமிழ் அரசியல் தலைவர்கள் என டக்ளஸ் சாடல்

தமிழ் அரசியல் தலைவர்கள் அரசியல் நோக்கங்களுக்காக மக்களை குழப்புகின்றனேரே தவிர மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கொவிட் நிலைமைகள் மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் அத்தியாவசிய தேவைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட இராணுவத் தளபதி, பொலிஸ் உயரதிகாரிகள், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், சுகாதார சேவையினர் உள்ளிட்ட அரச திணைக்கள உயரதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின போது அமைச்சர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக இன்றைய கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஆடைத் தொழிற்சாலைகளில் தொற்றுக்கள் பரவுகின்றன என குறிப்பிடப்பட்டாலும் அது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். மேலும் ஓரிரு நாள்களில் இந்த விடயம் அவதானித்து இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கலாம் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்த மாவட்டத்தில் தொடர்ச்சியாசட்ட விரோதமான மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. இன்றைய கலந்துரையாடலில் எவ்விதமான தீர்வும் எட்டப்படவில்லை. அடுத்த செவ்வாய்க்கிழமையளவில் மற்றுமொரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் இறுக்கமான முடிவுகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

கொழும்பில் தீ விபத்துக்குள்ளான கப்பல் விவகாரம் தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் வினவினர்.

குறித்த விடயம் தொடர்பில் அரசியல்வாதிகள் உள்நோக்கங்களை வைத்துக் கொண்டு மக்களைக் குழப்பும் கருத்துக்களைக் கூறி வருகின்றனர். அதிலும் குறிப்பாக சுமந்திரன் கொழும்பை மையமாக கொண்ட அரசியல் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்.

விபத்து இடம்பெற்ற பகுதியில் மீன் பிடிக்க யாரும் செல்வதில்லை. அங்கு எந்த விதமான தொழில் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறான நிலையில் மக்களைக் குழப்புகின்ற கருத்துக்களை அவர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

தடுப்பூசி ஏற்றும் விடயத்திலும் அந்த ஊசி வேண்டாம், இந்த ஊசி வேண்டும் என்ற வகையில் மக்களை குழப்பும் வகையிலான கருத்துக்களை அவர்கள் முன்வைத்து வருகின்றனர் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

## சவுதியில் விபத்து இலங்கையர் சாவு

சவுதி அரேபியாவில் நடந்த விபத்தொன்றில் அங்கு அல் மராய் நிறுவனத்தில் கடமையாற்றும் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏறாவூரைச் சேர்ந்த 38 வயதான சுலைமாலெப்பை ஹமீட் சபீர் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக அவரது உறவினர் தெரிவித்தார்.

சடலம் சவுதி அரேபியாவில் வைக்கப்பட்டுள்ளமையுடன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள இலங்கை வாழ் இளைஞர்கள் மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சட்டவிரோதமான மண் அகழ்வு; கிளிநொச்சியில் நால்வர் கைது

கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது நாட்டில் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டு இருந்த வேளையிலும் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளதாக மக்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

அதற்கமைய அதனைத் தடுக்கும் நோக்கில் தருமபுர பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களுக்கமைய இராமநாதபுரம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு டிப்பர்களும், கல்மடு நகர் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பரொன் றும், புளியம்பொக்கனை பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பரொன்றும் தருமபுர பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸ் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## பயணத் தடைக் காலத்தில் அதிக விலையில் மரக்கறிகள்

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆதரவுடன் விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலையில் மரக்கறிகள் கொள்வனவு செய்யப்பட்டு பயணத்தடை நேரத்தில் அதிக விலையில் மரக்கறிகள் விற்பனை செயயப்பட்டு வருகின்றன.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக நாடு பூராகவும் பயணத்தடை நடைமுறையில் உள்ள நிலையில் வவுனியா மாவட்டத்திலும் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் மக்களுக்குத் தேவையான மரக்கறி வகைகளை வழங்குவதற்கு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தாலும், பிரதேச செயலகத் தாலும் பலருக்கும் அனுமதிபத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதி பெற்றவர்கள், ஏற்கனவே பாதிப்படைந்துள்ள விவசாயிகளிடம் இருந்து மிகக் குறைந்த விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்து இரண்டு, மூன்று மடங்கு இலாபம் வைத்து மக்களுக்கு மரக்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர். இதனால் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளமையுடன், நாளாந்த கூலி வேலைசெய்து அன்றாட சீவியத்தைப் போக்கும் மக்களும் மரக்கறிகளை வாங்க முடியாத அளவுக்கு விலை ஏற்றம் காணப்படுகின்றது. இதன் மூலம் உற்பத்தியாளரும், பெறுநரும் பாதிப்படைய இடைத்தரகரான வியாபாரிகளே அதிக இலாபத்தைப் பெறுகின்றனர். இதற்கு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களமும் உடந்தையாகச் செயற்படுகின்றது.

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் மரக்கறிகளின் கொள்வனவு விலை மற்றும் விற்பனை விலை தொடர்பில் கட்டுப்பாட்டு விலையை அறிவித்துள்ளது. அந்த விலையில் விவசாயிகள் பாதிக்கும் வகையிலும், இடைத்தரக்கர் களாக செயற்படும் வியாபாரிகள் அதிக லாபம் பெறும் வகையிலும் அந்த விலைப் பட்டியல் அமைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக விவசாயிகளிடம் இருந்து 80 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் கத்தரிக்காய் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 60 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் வெண்டிக்காய் 120 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுன்றது. சில இடங்களில் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கும் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த நிலையில் கமநல அபவிருத்தி திணைக் களம் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொள்ளாது செயற்படுவதாக பல்வேறு தரப்புகளில் இருந்தும் குற்றச்சாட்டுகள் எழுத்துள்ளமையுடன், சமூக வலைத்தளங்களிலும் குறித்த திணைக்களத்துக்கு எதிரான பதிவுகள் வைரலாகி வருகின்றன.

## யாழ்.பல்கலை சித்தமருத்துவ மாணவர் இணைய வழி செயலமர்வு இன்று காலை

**இ.கலையமுதன்**

யாழ்ப்பாணம்,ஜூன் 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் 2019 ஃ 2020 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான இணையவழி திசைமுகப்படுத்தல் செயலமர்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

2019-2020 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டு, பல்கலைக்கழகத்தில் அனுமதிக்காகப் பதிவு செய்துள்ள சகல மணவர்களுக்கும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு திசைமுகப்படுத்தல் செயலமர்வுக்கான இணைப்பு விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகு 1984 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு துறையாக உள்வாங்கப்பட்டு, தனி அலகாகத் துணைவேந்தரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இந்த அலகால் சித்த மருத்து வமாணி சத்திர சிகிச்சைமாணி பட்டத்தை வழங்குவதுடன் 36 வருடங்களுக்கு மேலாக 500 இற்கும் அதிகமான சித்தமருத்துவர்களை உருவாக்கி அவர்களை இலங்கையில்; உள்ள அரச சித்த வைத்தியசாலை, கிராமியவைத்தியசாலை, இலவச சித்த வைத்திய நிலையங்களில் அரச சேவையில் ஈடுபட வழி வகுத்துக் கொண்டிருக்கின்றது. அதேநேரம் சித்த மருத்துவ அலகு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் சித்த மருத்துவபீடமாகத் தர முயர்த்தப்படுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருப்பது ஒரு முன்னேற்றகரமான விடயமாகும்.

## சினோபோர்ம் 2 ஆவது டோஸ் தடுப்பூசி வழங்கல் விவரம் எஸ்.எம்.எஸ். இல்!

கொழும்பு நகர சபையின் எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்குவதற்கான பொது விவரங்களை குறுஞ் செய்தி மூலம் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கொழும்பு மாநகர சபை தொற்று நோய் தொடர்பான வைத்தியர் தினுகா குருகே உறுதி படுத்தியுள்ளார்.

சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றவர்களுக்கு இரண்டா வது டோஸ் செலுத்தும் நடவடிக்கை நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்போது கொழும்பு நகர சபையின் எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு தடுப்பூசியின் அளவைப் பெற்றுக் கொள்ளவரும் திகதி, இடம் மற்றும் நேரம் குறித்து குறுஞ் செய்தியூடாக அறிவுறுத்தப்படும். நாட்டில் சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் அளவு இதுவரை 9 லட்சத்து 53 ஆயிரத்து 480 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் பல வான் கதவுகள் திறப்பு!

தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் பல வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால் நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 10 ஆயிரத்து 500 கன அடி நீர் வெளியேற்றப்படுவதால் தெதுரு ஓயாவை அண்மித்த மற்றும் தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## இனப் படுகொலையும்

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திரா காந்தி நிதானமாகவும் நிதார்த்தமாகவும் “முதலில் இங்கே பல அகதிகள் வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் உயிர்களுக்குப் பயத்தினால் தான் இங்கு வந்துள்ளார்கள். அவர்களுக்கு இந்தியாவில் இருக்க வேண்டும் என்ற விருப்பம் இல்லை. எங்களுக்கும் பெருவாரியான அகதிகள் இங்கு இருப்பது விருப்பமில்லை ஆனால் எங்களிடையே சட்டங்கள் உள்ளன. அதுபோலவே பிரித்தானியாவில் கூட அப்படியான சட்டங்கள் உள்ளன”- என்று சொன்னார்.

ஆனால் “நீங்கள் அவர்களை நாடு கடத்துவீர்களா?” என்று மேலும் சீண்ட, “சட்டம் தனது கடமைகளைச் செய்யும். எங்களது இரண்டு நாடுகளுக்கும் இடையில் அப்படியான ஓர் ஏற்பாட்டு முறை இல்லையும் கூட” என்பது பதிலாக வந்தது.

“எங்களுக்கு அவர்களின் உள்நாட்டு விடயங்களில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணமில்லை. ஆனால் எமது மக்களும் பாதிக்கப்படும் போது நாங்கள் அதைப் பொறுத்து அக்கறையில்லாமல் இருக்கமுடியாது. நாம் இப்பொழுதும் நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே இயங்க விரும்புகிறோம். ஆனால் அவர்களது (ஜே.ஆரின்) எண்ணம் தெரியாது” என்றும் அவரது பதில் அமைந்தது. இந்த நிலைப்பாடே அப்போதைய அடிப்படைக் கோட்பாடாக அமைந்தது. (வளரும்)



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

தொகுப்பு -
P.S.V.தினேஷ் B.A(Hons)
Geography Special.,
M.Phil in Geography.

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்.... அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும். தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

## 13ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

121) இலங்கையில் முதலாவது தொழிநுட்ப கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?
122) இலங்கையின் கல்வி வலயங்கள் எத்தனை?
123) இலங்கையில் தேசிய அடையாள அட்டை வழங்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
124) மெக்சிக்கோவின் நாணயம் எது?
125) இலங்கையில் தொழில் நியாய சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு?
126) நனோ தொழிநுட்பத்தில் மிகச் சிறிய அளவு?
127) இலவசக் கல்வியை மேம்படுத்த இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கல்வி அமைச்சு வழங்கும் காப்புறுதி?
128) உலக தொழிலாளர் தாபனத்தின் கண்ணியமான வேலைக்கான (Decent Work) உலக தினம் அனுஷ்டிக்கப்படுவது?
129) சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மீது அவர்கள் தடுத்து வைத்திருப்பவரை ஆஜர்ப்படுத்துமாறு கோரும் நீதிமன்ற ஆணை?
130) இலங்கையின் வன மூடுகை சதவீதம்?

பெயர் :- .................................................... அடையாள அட்டை:- ..................................
முகவரி :- .................................................... மின்னஞ்சல் முகவரி:- ..................................
தொலைபேசி இலக்கம்:- ............................

## 11ஆவது போட்டிக்குரிய பதில்கள்

101. டேவிட் மால்பாஸ்
102. 189
103. USA Washington
104. முல்லைத்தீவு
105. பட்டிபொல
106. செந்தரவு புத்தகம்
107. கிழக்கிந்திய கம்பனி 1601
108. Ralph Joseph Bunche
109. 27
110. உள்ளக பாதுகாப்பு,உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

## 05ஆம் திகதி வெளியான 11ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

ஐ.கார்த்திகன் - அத்தியடி
மாலதி இராஜேஸ்வரன் - உடுப்பிட்டி
ஜெ.விநோஜன் - குடத்தனை
அ.விதுஷன் - கொழும்பு 06
ஸ்ரீபவன் - கிளிநொச்சி

# கொரோனா திரிபு வைரஸ் தொற்று வாழ்நாள் முழுவதும் நீடிக்குமாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொவிட் தொற்றாளர் ஒருவருக்கு புதிய வகை வைரஸ் திரிவுகளின் காரணமாக ஏற்படும் பிரச்சினைகள் அவரது வாழ்நாள் முழுவதும் நீடிக்கலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளாகும் நபர்கள் சிலர் குறுகிய காலத்துக்குள் குணமடையாமையின் காரணமாக புதிய வகை வைரஸ் திரிவுகளுக்கு எதிராகப் போராடுவதற்கு வைத்திய நிபுணர்கள் வெவ்வேறு சிகிச்சை முறைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

கொவிட் நிமோனியாவின் கடுமையான பாதிப்புக்களில் இருந்து சிலர் மீண்டு வந்தாலும் புதிய திரிவுகள் நீண்டகால சுகாதார பாதிப்புக்களை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுகின்றது.

சிலர் குறுகிய காலத்துக்குள் மீண்டும் தொற்றுக்கு உள்ளாகக்கூடிய நிலை காணப்படுகின்றது. பயணக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ள காலப்பகுதிகளிலும் வீதிகளில் மக்களின் நடமாட்டம் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையால் வைரஸ் பரவல் தொடரும் நிலையே காணப்படுகின்றது.

புதிய வைரஸ் திரிவுகளின் தீவிரத்தன்மை தொடர்பில் தினசரி அதிகரிக்கும் கொவிட் மரணங்களின் மூலம் மக்கள் தற்போது தெளிவு பெற முடியும்.

இருப்பினும் கட்டுபாடுகளை தளர்த்தி நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொது மக்களின் கடின உழைப்பு மற்றும் தியாகங்கள் வீணாகி விடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8 ஆம் திகதிக்குபின் இலங்கையர் பிரித்தானியா செல்வதற்குத் தடை

எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் இலங்கையர்களுக்கு பிரித்தானியா செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய இராச்சியத்திற்குள் நுழையும் நாடுகளின் சிவப்பு பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 7 ஆம் திகதி வரை லண்டனுக்கு விமானங்களை முன்பதிவு செய்த பயணிகளுக்கு இந்த தடை பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானியா செல்லும் இலங்கையர்கள் கட்டாயம் இந்த நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா செல்லும் பயணிகள் மூன்று நாள்களில் ( 72 மணி நேரம்) கொவிட் தொடர்பான சோதனை மேற்கொண்டு எதிர்மறையான முடிவைப் பெற்றிருக்க வேண்டும்.

பிரித்தானியா செல்லும் பயணிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்திக்கொள்ள ஹோட்டலை (அங்கீகாரம் பெற்ற) முன்பதிவு செய்திருக்க வேண்டும். இதில் விடுதி, போக்குவரத்து மற்றும் கொவிட் பரிசோதனை என்பன அடங்கும்.

பயணிகள் வரும்போது அவர்கள் எங்கு தனிமைப்படுத்தப்படுவார்கள் என்ற விவரங்களுடன் பயணிகள் படிவத்தை (பி.எல்.எவ்) பூர்த்தி செய்ய வேண்டும்.

இதேவேளை, அண்மையில் கொவிட் பெருந்தொற்று ஆபத்து காணப்படும் சிவப்பு பட்டியலைக் கொண்டு நாடுகளின் வரிசையில் இலங்கையின் பெயரையும், பிரித்தானியா உள்ளடக்கியமை குறிப்பிடத்தக்கது.

# குறுஞ்செய்தியால் இரு குடும்பத்துக்கிடையில் மோதல் எட்டுப்பேர் காயமடைவு; இருவர் ஆபத்தான நிலையில்

கொழும்பு - பொரளை பகுதியில் இரு குடும்பத்தினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் எட்டு பேர் காயமடைந்துள்ள நிலையில், இருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இரு குடும்பங்களின் கணவன்மார்களும் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

'ஒரு பெண் தனது வீட்டுக்கு அருகில் உள்ள ஆண் ஒருவருக்கு குறுஞ் செய்தி அனுப்பியுள்ளார். இது குறித்து அறிந்துகொண்ட கணவர் ( வயது 35) அந்த குறுஞ் செய்தி யாருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் கண்டுபிடித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அந்த பெண்ணிடம் கேட்ட போது அந்த குறுஞ் செய்தி தவறுதலாக அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், குறுஞ் செய்தி அனுப்பப்பட்ட அயல் வீட்டுக்காரருடன் (வயது - 25 ) இது தொடர்பில் விசாரித்துள்ளமையுடன், பின்னர் இந்த விவகாரம் மோதலாக மாறியுள்ளது. இதனால் ஏற்பட்ட மோதலில் எட்டு பேர் காயமடைந்துள்ளனர் எனவும் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.